உ
சிவமயம்

மேற்கு அவுஸ்திரேலியா சைவ மகாசபை
பேர்த்-மண்டோகிளப்

# அருள் மிகு ஸ்ரீபாலமுருகன் கோவில்

## புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டப் பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக விழா
## விஞ்ஞாபனம்
## திருக்குட நன்னீராட்டுப் பெருஞ்சாந்திப் பெருவிழா
## 07.02.2020

குகநேயச் செல்வர்களே!

ஸ்ரீமத் அகண்டபரிபூரண சச்சிதானந்த பரப்பிரம்மமாய், அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகராய், ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும் ஜோதியாய், சர்வாபீஷ்டவரதராய் விளங்குகின்ற முழுமுதற் கடவுளால் படைக்கப்பட்ட இப்பூவுலகின் கண்ணே! சிவபூமி, கர்மபூமி எனவும் புண்ணிய நதிகள் பல சங்கமமான இந்து மஹாசமுத்திரத்தையும், பெங்குவின் முதலான பல தீவகங்களையும் அணித்தாகக் கொண்டு திகழ்வதும், ஓடிப்பாய்ந்து வரும் கங்காரு, ஒளிந்து ஒட்டி இருக்கும் கோலா ஆகிய அடையாளச் சின்னங்கள் மிளிருவதும், வரலாற்றுப் பெருமையுடையதுமாகிய அருமைபெருமை மிகுந்த ‘‘அவுஸ்திரேலியா’’ கண்டத்திலே! மேற்கு மாநிலமாக விளங்கும் திருவும் கல்வியும் சீரும் சிறப்பும் மிகுந்த ‘‘பேர்த்’’ மாநகரிலே! மலைகளும், வாவிகளும், நதிகளும், பசுமையான வயல்களும் நிறைந்து நானிலமும் நயமுடன் சூழ்ந்த ‘‘மண்டோகிளப்’’ என்னும் பகுதியிலே! பால் சொரியும் பசுவினங்களும், பலவிதபயிரினங்களும் மலிந்து! ஓங்கார நடமாடி கூவி அகவும் வண்ண வண்ண மயில்கூட்டங்களும் ‘‘கொக்கு அறக்கோ’’ என்று சூரியன் வரவை உணர்த்தும் ‘‘குக்குடம்’’ எனப்படும் சேவலுடன் கொஞ்சிக் குலவி மகிழும் புறா இனங்களும்! பார்த்தோர் மனம் குளிர்ந்து பரவசமாகும் மரங்களும் பூஞ்செடிகளும் நிறைந்து ‘‘பசும் சோலை’’ எனத் தோற்றும் ‘‘கந்தகோட்டம்’’ என்னும் திவ்விய பதியிலேயுள்ள புண்ணிய ே்த்திரத்திலே! கோலமா மஞ்ஞை தன்னில் குலவிடும் குமரன், குன்று தோர் ஆடும் குகன், ஈசனுடன் ஞானமொழிபேசிய சுவாமிநாதகுருபரன், பிரணவசொரூப மயூரவாகனன், கலியுகவரதன் எனப் போற்றப்படும் ஸ்ரீமுருகப் பெருமான் தம்மை வழிபடும் அடியார்களுக்குத் திருவருள் பொழிய வேண்டும் என்ற முகிழ்த்த பெருங்கருணையினால் ‘‘ஸ்ரீபாலசுப்பிரமணியப்பெருமான்’’ திருவுருவம் தாங்கி வீற்றிருந்து அருளாட்சி புரியும் இடம் அருள்மிகு ‘‘ஸ்ரீபாலமுருகன்’’ திருக்கோவிலாகும். இப்பொழுது இக்கோவில் திருப்பணிகள் பூர்த்தியாகி ஆகம நெறி தழுவி நடைபெற வேண்டிய மஹா கும்பாபிஷேக விழாவானது!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான சுபஸ்ரீ விகாரி வருஷம் உத்தமமான உத்தராயணம் முன்பனி குளிர்ந்த ஹேமந்தருது, மகர மாதம் (தை மாதம்) இருபத்து நான்காம் நாள் (24ம் திகதி) சுபரூப சுக்கிர வாரம் (07.02.2020 வெள்ளிக்கிழமை) சுபகரமான சுக்கில ப‘ திரயோதசித்திதியும் புனிதமான புநர்பூச நடசத்திரமும் சிறப்புறு சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 8 மணி முதல் 9 மணி 45 நிமிஷத்திற்குள் கும்ப லக்ன சுபமுகூர்த்த சுப வேளையில் ‘‘ஸ்ரீபாலசுப்பிரமணியப் பெருமானுக்கும்’’,

ஸ்ரீபாலசெல்வவிநாயகப்பெருமான், ஸ்ரீபொன்னம்பலவாணேஸ்வரப்பெருமான், ஸ்ரீசுவர்ணாம்பிகை அம்பாள், ஸ்ரீமஹா வல்லி கெஜாவல்லி சமேத ஸ்ரீசெல்வ முத்துக்குமார சுவாமிப் பெருமான், ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீமன்நாராயணப்பெருமான், ஸ்ரீஜயப்பசுவாமி, நூதன ஆத்மலிங்கப்பெருமான், ஸ்ரீதுர்க்கையம்பாள், ஸ்ரீஞானவைரவப் பெருமான், ஸ்ரீநவக்கிரகமூர்த்திகள் மற்றும் பரிவார மூர்த்திகள், உற்சவமூர்த்திகள், மூலாதாரவிநாயகப்பெருமான், மயூரம், பலிபீடம் ஆகிய சகல மூர்த்திகளுக்கும் ‘‘பெருஞ்சாந்தி’’ என்றும் ‘‘திருக்குட நன்னீராட்டு விழா’’ என்றும் விதந்து கூறப்படும் மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு திருவருள் கை கூடியுள்ளது. அடியார்கள் யாவரும் இக்கும்பாபிஷேகவிழாவிலும் அதற்குமுன்பும்பின்பும் நடைபெறுகின்ற கிரியா காலங்களிலும் ஆலயத்திற்கு வருகை தந்து சரியைத்தொண்டுகள் புரிந்து கிரியைகளைத்தரிசித்து யோகங்கள் பல பெற்று ஞானாநந்தப் பெருவாழ்வுபெற எம்பெருமானுடைய திருவடிகளைப் போற்றிப் பணிந்து சர்வா பீஷ்ட சகல சௌபாக்கிய சர்வமங்களப் பிரசாதம் பெற்றுய்வீர்களாக!

## கிரியா கால நிகழ்வுகள்

### மங்களகரமான விகாரி வருஷம் தை மாதம் 16ம் நாள் குருவாரம் (30.01.2020 வியாழக்கிழமை)

காலை 7.00 மணி - ஆலய நிர்வாகத்தினர் மங்கள உபசார சகிதம் சிவாச்சார்ய அழைப்பிற்கு வருகை.

7.35 மணி - பிரதிஷ்டா பிரதம சிவாச்சார்யார், சர்வபோதக, சர்வசாதக, வேதபாராயண, சிவாச்சார்யார்கள்வரணம். குருக்கள் அழைப்பு. சிவாச்சார்யார்கள் ஆலயப்பிரவேசம். சர்வகார்ய சித்தியர்த்தம் பிரசன்னஸ்ரீபாலகணபதி பூஜை, பிரதிஷ்டா சங்கல்பம், வருணகும்பபூஜை, புண்ணியாகவாசனம், பஞ்சகவ்ய பூஜை, தேவ பிராமண அனுக்ஞை, சுவாமி அனுக்ஞை, தனபூஜை, குபேர மஹாலச்சுமி ஹோமம். திரவியவிபாகம், சிற்பிஉபசாரம், முகூர்த்தநிர்ணயபத்திரிகாபடனம் (கும்பாபிஷேக பத்திரிகை படித்தல்) திரவிய சாலாஸ்தாபனம், ஸ்ரீமஹாகணபதி கும்ப பூஜை, அக்னிகார்யம், மஹாகணபதி ஹோமம், உபசார ஆகுதிகள், மஹா பூர்ணாகுதி, அபிஷேகம், தீபாராதனை, வேத ஆசீர்வாத, ஸ்தோத்திர, கீத, தாள நிர்த்தனாஞ்சலிகள் சமர்ப்பணம், கஜபூஜை, பிரம்மச்சார்ய பூஜை, நாளிகேர தாடனம் (தேங்காய் உடைத்தல்) விநாயகர் அகவல் பாராயணம். திருவருட் பிரசாதம் வழங்குதல்.

மாலை 7.00 மணி - ஸ்ரீதருணகணபதி ஆராதனை, புண்ணியாகவாசனம், பேரீதாடனம், கிராமசாந்தி, அஷ்டபலி, ஸ்ரீவைரவப்பெருமான் ஆராதனை. திருவருட் பிரசாதம் வழங்குதல்.

### தை மாதம் 17ம் நாள் சுக்கிரவாரம் (31.01.2020 வெள்ளிக்கிழமை)

காலை 9.00 மணி - ஸ்ரீபக்திகணபதி வழிபாடு, புண்ணியாகவாசனம், நவக்கிரஹ தேவதாராதனை, கிரஹமகம், நவக்கிரஹஹோமம், நவக்கிரஹராக ஆராதனை, கோளறுபதிகம்பாராயணம், அபிஷேகம், நவக்கிரஹப்பிரீதி ஆராதனை. திருவருட் பிரசாதம் வழங்குதல்.

மாலை 7.00 மணி - ஸ்ரீவீரகணபதி பூஜை, புண்ணியாகவாசனம்,

8.00 மணி - நூதனமூர்த்தி கிராமப்பிரத‘ணம். பிரவேசபலி, ஆராதனை. திருவருட் பிரசாதம் வழங்குதல்.

தை மாதம் 18ம் நாள் ஸ்திரவாரம் (01.02.2020 சனிக்கிழமை)

காலை 9.00 மணி - ஸ்ரீசக்திகணபதிவழிபாடு, புண்ணியாகவாசனம், நூதனமூர்த்தி தான்யாதி-வாசம், நயணோன்மீலினம், ஜலாதி வாசம், ஆராதனை. திருவருட் பிரசாதம் வழங்குதல்.

மாலை 7.00 மணி - ஸ்ரீபிரம்மகணபதி பூஜை, புண்ணியாகவாசனம், யந்திர பூஜை பூர்த்தி, ரᄋோக்ன ஹோமம், திசாஹோமம், சயணாரோஹணம். ஆராதனை. திருவருட் பிரசாதம் வழங்குதல்.

தை மாதம் 19ம் நாள் பாநுவாரம் (02.02.2020 ஞாயிற்றுக்கிழமை)

காலை 9.00 மணி - ஸ்ரீபிங்களகணபதிஆராதனை, புண்ணியாகவாசனம், சாந்திஹோமம், மூர்த்திஹோமம், சம்ஹிதா ஹோமம். ஆராதனை. திருவருட் பிரசாதம் வழங்குதல்.

மாலை 7.00 மணி - ஸ்ரீஉத்திஷ்டகணபதி வழிபாடு புண்ணியாகவாசனம், உத்தமபத-வாஸ்து சாந்தி, ஹோமம், கூஷ்மாண்டபலி, பர்யக்ணீகரணம், ஆலய கர்ப்பாவரன, குண்ட, மண்டல யாகசாலா பிரகாரசுத்தி, கோவாசம், குண்ட மண்டல, வேதிகா தான்யாதிஸ்தாபனம். ஆராதனை. திருவருட் பிரசாதம் வழங்குதல்.

தை மாதம் 20ம் நாள் ஸோமவாரம் (03.02.2020 திங்கட்கிழமை)

காலை 7.30 மணி - ஆசார்ய தசவிதஸ்நானம்

காலை 9.00 மணி - ஸ்ரீவிநாயககணபதிபூஜை, புண்ணியாகவாசனம், சிவாச்சார்யார்களுக்கு பஞ்சோபசாரம் வழங்குதல். விசேஷ சந்தி, கங்காபூஜை, தீர்த்த சங்கிரஹணம், ஸ்ரீசூர்யமூர்த்திபூஜை, அக்னிசங்கிரஹணம், ஆராதனை. திருவருட் பிரசாதம் வழங்குதல்

மாலை 6.00 மணி - ஸ்ரீப்ரகணபதிவழிபாடு, புண்ணியாகவாசனம், மிருத்சங்கிரஹணம், கிருத்திகா ரோஹிணி சமேத அமிர்தேஸ்வர பூஜை, பீஜாபாவனம், பிரதிசரபூஜை, ஆசார்ய ர'ாபந்தனம், மூர்த்திபவரணம், யஜமான் ர'ாபந்தனம் தர்மதுவஜ ஆரோஹணம், பரிவார யாக பூஜை, பிரசன்னாபிஷேகம், பிரசன்னபூஜை, சிவாச்சார்யார்கள் சுவாஹதம் (வரவேற்பு, அறிமுகம்) கடஸ்தாபனம், கலாகர்ஷணம், அதிவாசம், மூர்த்திசம்யோஜனம், 'ணஹோமம், யாத்ராஹோமம், யாத்ரா தானம், கும்பங்கள் யாகசாலாப்பிரவேசம், கும்பஸ்தாபனம், ஆராதனை. விருஷப பூஜை, பேரசலனம், முதலாவது கால யாக பூஜை, நவாக்னி விபஜனம், மூலமந்திர, காயத்ரீ மந்திர ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, திருவருட் பிரசாதம் வழங்குதல்.

தை மாதம் 21ம் நாள் மங்களவாரம் (04.02.2020 செவ்வாய்கிழமை)

காலை 9.00 மணி - ஸ்ரீஹேரம்பகணபதிபூஜை, புண்ணியாகவாசனம், விசேஷசந்தி, பூதசுத்தி, துவஜபூஜை, இரண்டாவது கால யாக பூஜை, பாவனாபிஷேகம், ஷடா'ர மந்திர, வஸ்ய மந்திர, ஆகர்ஷண மந்திர ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, திருவருட் பிரசாதம் வழங்குதல்.

மாலை 7.00 மணி - ஶ்ரீலீமீகணபதி ஆராதனை, புண்ணியாகவாசனம், சிவோஹம் பாவனை துவஜ பூஜை, மூன்றாவது கால யாக பூஜை. ஸ்கந்தசூக்த மந்திர ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, திருவருட் பிரசாதம் வழங்குதல்.

தை மாதம் 22ம் நாள் ஸௌமியவாரம் (05.02.2020 புதன்கிழமை)

காலை 6.00 மணி - ஶ்ரீமஹா கணபதி பூஜைபுண்ணியாகவாசனம், அந்தர்யாகம், சிவோஹம் பாவனை துவஜ பூஜை.

காலை 8.05 மணி - ஸ்தூபிஸ்தாபனம், சுமங்கலிபூஜை, பூர்ணகும்ப தீபஸ்தாபனம், ரத்னநியாசம், கூர்ம, பத்ம, மயூரஸ்தாபனம்.

காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை - சுவாமிகளின் பீடத்தில் அடியார்கள் தங்கம், நவரத்தினம் ஆகியன சமர்ப்பித்தல்.

காலை 10.15 மணி முதல் 11.40 மணிக்குள் - யந்திரஸ்தாபனம் பிம்பஸ்தாபனம் (சுவாமிகள் ஸ்தாபனம்,) அஷ்டபந்தனம், நாலாவது கால யாக பூஜை, ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, திருவருட் பிரசாதம் வழங்குதல்.

05.02.2020 புதன்கிழமை மாலை 7.00 மணி முதல் இரவு 10.00 மணிவரையும் 06.02.2020 வியாழக்கிழமை காலை 7.00 மணி முதல் பகல் 12.00 மணி வரையும் அடியார்கள் எண்ணைய் சாத்தலாம்.

மாலை 7.00 மணி - ஶ்ரீவிக்னகணபதிபூஜை புண்ணியாகவாசனம் சிவோஹம்பாவனை துவஜபூஜை. ஐந்தாவது கால யாக பூஜை, சத்துருசங்கார திரிசதீஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, 'மஹாகும்பாபிஷேக மலர் வெளியீடு' திருவருட் பிரசாதம் வழங்குதல்.

தை மாதம் 23ம் நாள் குருவாரம் (06.02.2020 வியாழக்கிழமை)

காலை 9.00 மணி - ஶ்ரீநிர்த்த கணபதி பூஜை, புண்ணியாகவாசனம், ஆலயசரவணப்பொய்கை தீர்த்தக் கரையில்' விசேஷசந்தி, பூதசுத்தி, துவஜ பூஜை, ஆறாவது கால யாக பூஜை, ஸ்தாலீபாகம், அன்னாகுதி, விசேஷ திரவியஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, திருவருட் பிரசாதம் வழங்குதல்.

மாலை 5.00 மணி - சிவோஹம் பாவனை, தீப, கலச, கண்டா, ஶ்ரீஊர்த்துவகணேச, வருண, பஞ்சகௌவிய, பஞ்சாமிர்த, ர'ாபந்தன, பிம்பசுத்திகும்ப பூஜைகள், ஜபம், ஆராதனை - துவஜபூஜை, பிம்பசுத்தி, பிம்ப ர'ாபந்தனம். சகலஷடத்துவ நியாசம், ஏழாவது கால யாக பூஜை, ஹோமம், நாடிசந்தானம், ஸ்பர்சாகுதி, பூர்ணாகுதி, தீபாராதனை, சிவாச்சார்யபூஜனம், திருவருட் பிரசாதம் வழங்குதல்.

தை மாதம் 24ம் நாள் சுக்கிரவாரம் (07.02.2020 வெள்ளிக்கிழமை)

அதிகாலை 5.00 மணி- சர்வவிக்ன நிவாரக ஶ்ரீ சங்கடஹர கணபதி ஆராதனை, புண்ணியாகவாசனம், சிவோஹம் பாவனை துவஜ பூஜை, எட்டாவது கால யாக பூஜை, ஹோமம், நவாக்னி சம்யோஜனம் - உபசாரஆகுதி. ஜயாதிஹோமம், மஹா பூர்ணாகுதி, மூர்த்தி சம்யோஜனம், அந்தர் பலி, பகிர் பலி, சோடச உபசார பூஜை, யாத்திரா தானம்.

காலை 7.30 மணி - இராஜகோபுர ஸ்தூபி கும்பங்கள் விமானஸ்தூபி கும்பங்கள் புறப்பாடு - வீதிவலம்.

காலை 8.10 மணி - இராஜகோபுர சுந்தர விமான சிகர கலசங்கள் கும்பாபிஷேகம்.

காலை 8.15 மணி - பிரதான சுந்தரவிமான ஸ்தூபி கலச, பரிவார ஆலய ஸ்தூபி கலசங்கள் கும்பாபிஷேகம். மயூர பூஜை, பிரதான மூர்த்தி கும்பங்கள் வேத, கீத, சங்க, மங்கள வாத்திய சகிதம் திரு வீதி பிரதக்ஷணம். வேதோக்கமந்திரலாஜசுகந்த புஷ்பாஞ்சலி சமர்ப்பணம். மங்களஆராத்தி, மூலதாரவிநாயக, மயூர அபிஷேகம், துவாரபாலார்ச்சனம், கும்பம் மூலாலயப் பிரவேசம், மூர்த்தி ஆவாஹனம்.

8.45 மணி - திருவருள்மிகு “ஸ்ரீபாலசுப்பிரமணியப் பெருமானுக்கு” மஹா கும்பாபிஷேகம். “பரிவாரமூர்த்திகள்” கும்பாபிஷேகம். மஹாஹவிர்நிவேதனம், அகண்டதீபம். கர்ப்பாவரணம், திருக்கடைக் காப்பு, தேவாதிகள் குப்த பூஜை, ஸ்திராகுதி, யாக உத்வாசனம், தசமங்கள பூஜை, தசமங்களதர்சனம். யஜமான் அபிஷேகம், பிரதிஷ்டாபலசமர்ப்பணம். மஹாஅபிஷேகம், விசேஷபூஜை, குருநமஸ்காரம், ஆசீர்வாதம். திருவருட் பிரசாதம் வழங்குதல். மகேஸ்வர பூஜை (அன்னதானம்).

மாலை 6.00 மணி - சாயங்காலப்பூஜை, திருக்கல்யாணம், சோடச உபசார பூஜை, திருஊஞ்சல், பாராட்டுகள், கௌரவிப்புகள். சுவாமிதிருவீதியுலா. சம்பாவனை. திருவருட்பிரசாதம் வழங்குதல். ஆசார்ய உற்சவம் சுப மங்கள ஆசீர்வாதம்.

## தை மாதம் 25ம் நாள் ஸ்திரவாரம் (08.02.2020 சனிக்கிழமை)

காலை 7.30 மணி - காலைப் பூஜை, அவபிரதஸ்நானம்

மாலை 6.00 மணி - மண்டலாபிஷேகம் ஆரம்பம்.

குறிப்பு: பூஜாக் காலங்களில் பூர்ணாகுதிப்பிரத‘ணம் யாக சாலாப்பிரத‘ணம், விசேஷ தீபாராதனை, சண்முகார்ச்சனை, வேதபாராயணங்கள், ஆசீர்வசனங்கள், ஸ்தோத்திர பாராயணங்கள், திருமுறைகள், அருணகிரிநாத சுவாமிகள் அருட் பாடல்கள், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, கந்த சஷ்டி கவசம், ஷண்முக கவசம் ஆகியன பாராயணங்கள் ராக, தாள, கீத, நிர்த்தனாஞ்சலி சமர்ப்பணமும் கிரியா கால பூர்த்தியில் ஆசியுரைகள், அருளுரைகள், கிரியாவிளக்கஉரைகள் ஆகியனவும் இடம்பெறும்.

“வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”